**எண்**: 63/2024 **நாள்**: 07.05.2024

**<u>தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்</u>**

**<u>எண்.3, தேர்வாணையச் சாலை, சென்னை – 600 003</u>**

**<u>செய்தி வெளியீடு</u>**

ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-II(தொகுதி-IIA) பணிகளில் அடங்கிய நேர்முகத்தேர்வு அல்லாத பதவிகளுக்கான காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம் செய்யும் பொருட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், 23.02.2022 நாளிட்ட அறிவிக்கை எண்.03/2022-இன் வாயிலாக விண்ணப்பங்களைக் கோரியிருந்தது. இப்பதவிக்கான முதன்மை எழுத்துத்தேர்வு கடந்த 25.02.2023 (மு.ப மற்றும் பி.ப) அன்று நடைபெற்றது. முதன்மை எழுத்துத்தேர்வில் விண்ணப்பதாரர்கள் பெற்ற மதிப்பெண் மற்றும் தரவரிசை விவரங்கள் 08.04.2024 அன்று தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

நேர்முகத் தேர்வு அல்லாத பதவிகளுக்கான (**நேர்முக எழுத்தர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் பதவிகள் தவிர**) மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு **15.05.2024 முதல் 20.06.2024 வரை** தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், எண்.3, தேர்வாணையச் சாலை (பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் கோட்டை ரயில் நிலையம் அருகில்), சென்னை-600 003-ல் உள்ள தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

மேற்படி மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களின் மதிப்பெண்கள் / ஒட்டுமொத்த தரவரிசை எண் / இடஒதுக்கீட்டு விதி மற்றும் காலிப்பணியிடங்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட தற்காலிக தெரிவாளர்களின் பட்டியல் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டது.

மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கான நாள், நேரம் மற்றும் இதர விவரங்கள் அடங்கிய அழைப்பாணையினை விண்ணப்பதாரர்கள் தேர்வாணைய இணையதளமான www.tnpsc.gov.in-லிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். மூலச்சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு அதற்கான விவரம் **குறுஞ்செய்தி** (SMS) **மற்றும் மின்னஞ்சல்** (**E-mail**) மூலம் மட்டுமே தெரிவிக்கப்படும். மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கான அழைப்பாணை தனியே அஞ்சல் மூலம் அனுப்பப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு பங்கேற்க அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள், எழுத்துத்தேர்வில் அவரவர் பெற்ற மதிப்பெண்கள் / ஒட்டுமொத்த தரவரிசை / இடஒதுக்கீட்டு விதிகள் / விண்ணப்பத்தில் அளித்துள்ள தகவல்கள் மற்றும் காலிப்பணியிடங்களுக்கு ஏற்ப கலந்தாய்விற்கு அனுமதிக்கப்படுவர். எனவே, சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படும் அனைவரும் கலந்தாய்விற்கு அனுமதிக்கப்பட்டு பணி நியமனம் வழங்கப்படும் என்பதற்கான உறுதி அளிக்க இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விண்ணப்பதாரர்கள் மேற்படி சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு குறிப்பிடப்பட்ட நாள் மற்றும் நேரத்தில் கலந்துகொள்ளத் தவறினால் அவர்களுக்கு மறுவாய்ப்பு அளிக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ச. கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப.,
செயலாளர்

**No: 63/2024** **Date: 07.05.2024**

**TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION**

**No.3, TNPSC Road – Chennai 600 003**

**Press Release**

The Tamil Nadu Public Service Commission in its Notification No.**03/2022**, dated 23.02.2022 had invited applications for selection of candidates for appointment by direct recruitment to the posts included in Combined Civil Services Examination-II (Non-Interview Posts) (Group-IIA Services). For which Main Written Examination was held on 25.02.2023 F.N & A.N. Mark and rank position of the candidates who were admitted to main written examination was hosted on the Commission's website on 08.04.2024. In order to verify the genuineness of claims of the candidates made in their online applications regarding age, educational qualification, community, etc., **Physical Certificate Verification and Counselling** is scheduled to be held from **15.05.2024 to 20.06.2024** at the O/o. Tamil Nadu Public Service Commission, No.3, TNPSC Road, (Near Broadway Bus Stand and Fort Railway Station), Chennai–600 003 for all the non interview posts (**Except the posts of Personal Clerk and Steno Typist**) included in Combined Civil Services Examination-II (Non-Interview Posts) (Group-IIA Services).

The list of candidates who have been admitted provisionally for Physical Certificate Verification and Counselling have been shortlisted based on merit, overall rank, rule of reservation of appointments and number of vacancies and the same have been hosted in the Commission's website. Candidates are hereby informed to download the Memorandum of Admission to physical certificate verification and Counselling through the Commission's website viz., **www.tnpsc.gov.in** and also directed to attend the Physical Certificate Verification and Counselling on the scheduled date / time without fail. The candidates are also will be informed through SMS and Email only. **Memorandum of admission to certificate verification and counselling to the candidates will not be sent by post.**

The allotment to the post is strictly subject to availability of vacancies in their respective reservation categories when they reach their turn as per their rank, rule of reservation and subject to their eligibility. Therefore, the candidates called for Physical Certificate Verification are not assured of being admitted to Counselling.

Candidates who do not appear for Physical Certificate Verification and Counselling on the scheduled date and time allotted to them will lose their opportunity in the combined merit list and they will not be given any further chance to appear for the same.

S.Gopala Sundara Raj, I.A.S.,
Secretary